பெருநகர சென்னை மாநகராட்சி
செய்தி வெளியீடு

செ.வெ.எண். 74 நாள்: 30.06.2017

## பெருநகர சென்னை மாநகராட்சிக்குட்பட்ட பகுதிகளில் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இதுகுறித்த கருத்துகளை பொதுமக்கள் தெரிவிக்கலாம் என ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

தூய்மை இந்தியா திட்டத்தின்கீழ் திறந்தவெளியில் மலம் கழித்தல் இல்லாத (ODF) திட்டம் செயல்படுத்தப்பட்டு வருகிறது. இந்தத் திட்டத்தின் முதற்கட்டமாக கீழ் பட்டியலிடப்பட்டுள்ள வார்டுகளுக்குட்பட்ட பகுதிகளிலுள்ள பள்ளி மாணவர்கள், ஆசிரியர்கள், பள்ளிகளில் பணிபுரியும் அலுவலர்கள், சுய உதவிக் குழுக்கள், தனியார் பகுதியில் எங்கும் திறந்தவெளியில் மலம் கழிப்பதில்லை என சான்றிதழ்களின் மூலம் அறிவிப்புகள் சமர்ப்பித்துள்ளார்கள். மேலும் அவர்கள் தங்கள் சொந்த வளாகத்தில் உள்ள கழிப்பறையையே பயன்படுத்துகிறார்கள். மேலும், கழிப்பறை இல்லாத குடும்பங்களில் தங்கள் வளாகத்தில் கழிப்பறை கட்ட போதிய இடம் இருக்கும் பட்சத்தில் அரசு உதவியுடன் கழிவறை கட்ட ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது அல்லது தங்கள் வளாகத்தில் கழிப்பறை கட்ட போதுமான இடம் இல்லாத பட்சத்தில் அவர்கள் தங்கள் பகுதியிலிருந்து 500 மீட்டர் தூரத்திற்குள் உள்ள ஒரு சமுதாய கழிப்பறையை அணுகி உபயோகப்படுத்தலாம் என்ற நிலை உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. இதுகுறித்து பொதுமக்களின் கருத்து மற்றும் குறைகளை இவ்வறிவிப்பு வெளியிட்டு 15 நாட்களுக்குள் அளிக்க கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

| மண்டலம் எண். | கோட்டம் எண்கள் | தொடர்பு கொள்ள வேண்டிய அலுவலர் | முகவரி (ம) தொலைபேசி எண் |
|---|---|---|---|
| 1 | 8, 10 | மண்டல அலுவலர் –1 | எண்.947, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,<br>சென்னை – 600 019.<br>9445190001 |
| 3 | 28, 33 | மண்டல அலுவலர்–3 | எண்.1, தட்டாங்குளம் தெரு, பஜார் சாலை,<br>மாதவரம், சென்னை–600060.<br>9445190003 |
| 4 | 35, 36, 40, 48 | மண்டல அலுவலர்–4 | எண்.266, திருவொற்றியூர் நெடுஞ்சாலை,<br>சென்னை – 600 021<br>9445190004 |
| 5 | 51 | மண்டல அலுவலர்–5 | எண்.62, பேசின் பிரிட்ஜ் ரோட், பழைய வாஷர்மன்பேட்,<br>சென்னை – 600 021<br>9445190005 |
| 8 | 97, 107 | மண்டல அலுவலர்–8 | எண்.36B, இரண்டாவது குறுக்குத் தெரு,<br>புல்லாவ் அவின்யூ, செனாய் நகர்,<br>சென்னை – 600 030.<br>9445190008 |
| 13 | 176, 179 | மண்டல அலுவலர்–13 | எண்.115, டாக்டர்.முத்து லட்சுமி சாலை,<br>சென்னை–600 020.<br>9445190013 |
| 14 | 168 | மண்டல அலுவலர்–14 | எண்.6/64, புழுதிவாக்கம் மெயின் ரோடு,<br>சென்னை–600 091.<br>9445190014 |
| 15 | 197 | மண்டல அலுவலர்–15 | எண்.120, ராஜிவ் காந்தி சாலை,<br>(பழைய மகாலிங்கபுரம் சாலை), சோழிங்கநல்லூர்,<br>சென்னை–600 119.<br>9445190015 |

இதன்பொருட்டு தேவை ஏற்படின் பட்டியலில் குறிப்பிட்டுள்ள சம்பந்தப்பட்ட மண்டல அலுவலர்களை தொடர்பு கொள்ளலாம் என பெருநகர சென்னை மாநகராட்சி ஆணையாளர் முனைவர்.தா.கார்த்திகேயன், இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

**செய்தி வெளியீடு : துணை இயக்குநர் / மக்கள் தொடர்பு அலுவலர்,**
**பெருநகர சென்னை மாநகராட்சி**